**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமேஸ்வரம்.**

**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**2023–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16–ம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண்.49/2020**
**இன்**
**அ.வ.எண்.42/2015**

பர்வதவர்த்தினி மற்றும் 9 நபர்கள் ......மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

இராஜவேலு மற்றும் 8 நபர்கள் ........எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 20.07.2023–ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.S.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜாம்சிங் அண்டன் அவர்கள் ஆஜராகியும், 2, 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுப்புராஜ் அவர்கள் ஆஜராகியும், 4, 5, 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒருதலைப்பட்சமாக உள்ள நிலையில், இருதரப்பு வாதங்களையும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உவிநமுச கட்டளை 6 விதி 17 சிபிசி படி அசல் வழக்கின் பிராதினை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.**மனுவின் சுருக்கம்:**

மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2 ம் வாதி ஆவார். மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து தாவா சொத்தானது வாதிகளுக்கும், 4, 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கும் பாத்தியம்

என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரரின் தூண்டுதலின்பேரில் 2, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் வழகக்கு நிலுவையில் இருக்கும்போது மனுதாரர்கள்/வாதிகள் வெளியூர் சென்றிருந்த நிலையில், அக்கிரமான முறையில், ஆள் மற்றம் பண பலத்தை கொண்டு தாவா சொத்தினை ஆக்கிரமித்து அதில் தகர செட்டினை அமைத்துவிட்டார்கள். அதனால் அதனை தடுக்க சென்ற மனுதாரர்கள்/வாதிகளை கொலைமிரட்டல் விட்டதால், இந்த மனுதாரர், 1, 7 மனுதாரர் ஆகியோர் சேர்ந்து மாவட்ட ஆட்சியரிடமும், காவல்துறை அதிகாரிகளிடமும் புகார் கொடுக்கப்பட்டது.

இந்நிலையில் மனுதார்கள் /வாதிகளிலில் முன்னால் வழக்கறிஞர் அசல் வழக்கில் சரியான வழிகாட்டுதலும் சட்டவிபரங்களும் தெரியப்படுத்ததால் தற்போது உள்ள வழக்கறிரை மாற்றி நடத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் அசல் வழக்கில் பிராத்திதுள்ள பரிகாரத்துடன் கூடுதலாக 1 , 2, 7, 8 மற்றும் 9 ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோர தற்போது உள்ள வழக்கறிஞர் அறிவுரை வழங்கியதன் அடிப்படையிலும், மேலும் வழக்கின் ஆவணங்களின் அடிப்படையிலும் ஏற்கனவே உள்ள சில பொருண்மைகளை பொறுத்து நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து அதனை பொறுத்து மேற்படி அசல் வழக்கின் பிராதில் சில திருத்தங்கள் செய்யவேண்டியது பொருண்மைகளை பொறுத்தும், நீதியின் படியும் அவசியமாகிறது. எனவே மனுவில் சொல்லியுள்ளபடி திருத்த விபரங்களை அசல் வழக்கில் சேர்க்காமல் போனால் எங்களது உரிமைக்கும் உடைமைக்கும் பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். அசல் வழக்கில் Primafacle வழக்கும் balance of convenice ம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு சாதமாக உள்ளது. மனு அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. எனவே மனுவை அனுமதிக்கும்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **1ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி எதிருரையின் சுருக்கம்**

மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

மனுதாரர்கள் /வாதிகள் சீர்திருத்த விபரத்தில் IIIம் பத்தியில் 5ம் பாராவின் தொடக்கத்தில் தாவா சொத்து என்பதற்கு பதிலாக தாவா சொத்தும் அதனோடு இணைந்த மேற்குபக்க சொத்து என்பதில், அச்சொத்திற்கு சர்வே எண்ணும் அல்லது வேறுவகை எண்களோ குறியீடு செய்யவில்லை. இல்லாத சொத்து இருப்பதாக சொல்வது பொய்யாகும்.

வழக்குரை IIIம் பத்தி 6ம் பாராவிற்கு பதிலாக தாவா சொத்து மற்றும் அதனோடு மேற்குபக்க சொத்தை என சொல்லிருப்பது தவறாகும். பஞ்சவர்ணம்மாள், சேதுகோனாரருக்கு 14.11.1968ல் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார் என்பது மறுக்கப்படுகிறது. ஏனெனில் தாவா சொத்தை பொறுத்து மட்டுமே சேதுகோனார் கிரையம் பெற்றுள்ளார். அதனோடு இணைந்த மேற்கு பக்க சொத்தையும் சேர்த்து முழு சுவாதீனத்தையும் உரிமை பெறவில்லை.

வழக்குரை IIIம் பத்தி 7ம் பாராவிற்கு பதிலாக சேதுகோனார் கிரையம் பெற்ற காலம் முதல் தாவா சொத்தையும் மேற்குபக்க சொத்தையும் சுவாதீனம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்பது மறுக்கப்படுகிறது.

வழக்குரை IIIம் பத்தி 8ம் பாராவிற்கு பதிலாக கடந்த 13.07.2001ல் ராஜவேலுக்கு தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்தை பொறுத்து கருப்பாயி அம்மாள், 2ம் வாதி குமார், கருப்பையா, முனியசாமி மற்றும் நம்பு என்ற தில்லை ஆகியோர்களுக்கு மட்டும் கிரைய ஆவணம் பதிவுசெய்து கொடுத்துள்ளார் என்பது ஆட்சேபிக்கப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை பொறுத்து மட்டுமே கிரையம் ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளார். இந்த வழக்கில் தாவா சொத்தை பொறுத்து மட்டுமே வழக்கு நடைபெறுகிறது. மேற்குபக்கம் இல்லாத சொத்திற்கு வழக்கு நடைபெறவில்லை. தாவா சொத்தை பொறுத்து மட்டும்தான் 1ம் எதிர்மனுதாரர் அடைமானம் வாங்கி பின்பு கிரைய ஆவணம் பதிவு செய்திருக்கிறார்கள்.

வழக்குரை IIIம் பத்தி 9ம் பாராவிற்கு பதிலாக கடந்த 13.07.2001ல் ராஜவேலுக்கு தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்தை பொறுத்து கருப்பாயி அம்மாள், 2ம் வாதி குமார், கருப்பையா, முனியசாமி மற்றும் நம்பு என்ற தில்லை ஆகியோர்களுக்கு மட்டும் கிரைய ஆவணம் பதிவுசெய்து கொடுத்துள்ளார் என்பது ஆட்சேபிக்கப்படுகிறது. மேற்படி நபர்களிடமிருந்து தாவா சொத்தை மட்டும் 1ம்

எதிர்மனுதாரர் கிரைய ஆவணம் மூலம் பெற்றுள்ளார். மேற்படி நபர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு கிரைய ஆவணம் பதிவு செய்தது செல்லாது என இந்த வழக்கில் 4, 5, 6 பிரதிவாதிகள் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ததில் அவர்களுக்கும் அந்த வழக்கில் 6, 7 பிரதிவாதிகளான இந்த வழக்கின் 1, 7 வாதிகளான பர்வதவர்த்தினி மற்றும் ஜீ.காளீஸ்வரிக்கும் அந்த வழக்கின் தாவா சொத்தில் 1/8 பங்கு உரிமை உள்ளது என உத்தரவு ஏற்பட்டுள்ளது என்பதை 1ம் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது.

வழக்குரை IIIம் பத்தி 12ம் பாராவிற்கு அடுத்து 13ம் பாராவிற்கு பதிலாக 1ம் பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில் 2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தாவா சொத்தில் இரும்பு தகர செட்டினை அமைத்துவிட்டார்கள் என்று சொல்லியிருப்பதையும், 1ம் வாதியை கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்பதையும் மறுக்கப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் எந்த தூண்டுதலும் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் எவ்விதமான இரும்பு செட்டினையும் அமைக்கவில்லை. அதனால் உரிமை விளம்புகை கேட்டும் நிறைவேற்றுதல் விளம்புகை கோரியிருப்பது ஏற்கக்கூடியதல்ல.

4. <u>2, 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும்.

மனுதார்கள்/வாதிகளால் மனுவில் சீர்திருத்த விபரங்களில் பாரா 1ல் சொல்லப்பட்ட விபரங்களை அனைத்தும் இந்த எதிர்மனுதாரர்களால் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்ட விபரங்களின் அடிப்படையிலேயே மேற்படி விபரங்களை மனுதாரர்களால் பிராதில் சேர்க்கப்பட வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. உண்மையில் மேற்படி பாராவில் சொல்லப்பட்டுள்ள 1922ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள், 1952ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணமும், இந்த மனுதாரர்களால் பிராதில் ஆவணமாக சேர்க்கப்படவேண்டும் என்ற விபரத்தை எந்த இடத்திலும் சொல்லவில்லை.

வழக்குரை IIIம் பத்தி 6ம் பாராவிற்கு பதிலாக அந்த பாராவில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் ஏற்கக்கூடியதல்ல. மேற்படி பாராவில் பாக விடுதலை பத்திரம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பாக விடுதலை பத்திரமானது இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டதாக மனுவிலோ பிராதிலோ சொல்லவில்லை. மேலும் மேற்கு பக்க சொத்து எவ்வளவு அளவில் உள்ளது என்ற விபரத்தை மனுவிலும் சொல்லவில்லை.

அதேபோல் மனு சீர்திருத்த விபரம் பாரா 3ல் சொல்லியுள்ள விபரங்களை ஏற்கக்கூடியதல்ல. கடந்த 2015ம் ஆண்டு முதலே வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சீர்திருத்த பாரா 3ல் சொல்லியுள்ள விபரங்களை அனைத்தும் கடந்த 2015ம் ஆண்டிற்கு முன்பே நடந்துவிட்டது. வேண்டுமென்றே மனுதாரர்கள் பிராதில் சொல்லாமல் மறைத்துவிட்டு பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு பிராதில் சேர்க்கக்கோரி சொல்லப்பட்டுள்ளது ஏற்கக்கூடியதல்ல.

அதேபோல் மனு சீர்திருத்த விபரம் பாரா 4ல் 8வது பாராவிற்கு பதிலாக சொல்லியுள்ள சங்கதி ஆட்சேபிக்கப்படுகிறது. அதில் சொல்லப்பட்ட விபரங்களை நிரூபக்கும்விதமாக எவ்வித ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி ஆவணங்களை வாதிலோ, திருத்தப்படவேண்டிய மனுவிலோ சேர்க்கப்பட வேண்டும் என்று எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

மனு சீர்திருத்த விபரம் பாரா 5ல் சொல்லியுள்ள விபரங்களை ஏற்கமுடியாது. மேற்படி சீர்திருத்த பாராவில் 4, 5, 6 பிரதிவாதிகள் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தபோது, இந்த வழக்கில் 1 முதல் 7 வாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ததாக மனுதார்களே ஒப்புக்கொண்டுள்ளார்கள். அதேபோல் மேற்படி நபர்கள் ராஜவேலுக்கு கிரையம் செய்து கொடுத்த விபரத்தையும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேற்படி விபரங்கள் மனுதாரர்களுக்கு நன்கு தெரிந்தும் வழக்குரையில் சொல்லாமல் இருந்துவிட்டு பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதால் தற்போது அதை சேர்க்க முற்பட்டுவருகிறார்கள்.

மனு சீர்திருத்த விபரம் பாரா 6ல் சொல்லியுள்ள விபரங்களை ஏற்கக்கூடியதல்ல. இந்த மனுதாரர்களே தாவா சொத்தை உள்ளிட்ட சொத்துகளை கூட்டுஅனுபவம் செய்து

வந்ததகாகவும அதன்பேரில் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாக உரிமை உத்தரவு பெற்றதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். அதேபோல் பட்டா மாறுதலுக்காக மனு செய்ததையும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். அதற்கு மாறாக மேற்படி நீதிமன்ற உத்தரவில் என்ன விபரம் சொல்லப்பட்டது என்றோ, வட்டாச்சியரிடம் கொடுக்கப்பட்ட மனுவில் என்ன உத்தரவு கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை. அதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் வாதிகளுக்கு எந்த விபரமும் தெரியாது என சொல்லியிருப்பதில், மேலும் அ.வ.எண்.42/2015 வழக்கானது இந்நீதிமன்றத்தில் வாதிகளுக்கு எதிராக நிலுவையில் இருந்து நடத்தி வரும் வாதிகள் எந்த விபரமும் தெரியாது என்று இந்த வழக்கில் பொய்யாக கூறியுள்ளார்கள்.

மனு சீர்திருத்த விபரம் பாரா 6ல் சொல்லியுள்ள விபரங்கள் உண்மைக்குபுறம்பானது ஆகும். மேற்படி இரும்பு தகர செட்டானது கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அமைக்கப்பட்டு இந்த பிரதிவாதிகளால் பராமரித்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றை தெரிந்தும் வழக்கில் சேர்க்காமல் தற்போது சேர்த்து பிராதை மாற்றி அதன்கீழ் ஒரு பரிகாரம் கோர முயற்சித்து வருகிறார்கள்.

மனு சீர்திருத்த விபரம் பாரா 9ல் வியாஜ்ஜிய மூலத்தில் சேர்க்கப்பட்வேண்டிய விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை.

மனு சீர்திருத்த விபரம் பாரா 10ல் தாவா சொத்தில் வாதிகளுக்கும் 4, 5, 6 பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியம் என உரிமை விளம்புகை பரிகாரம் உத்தரவிற்கு பதிலாக மீண்டும் அதே பரிகாரத்தை சேர்க்க சொல்லி கேட்பது காலதாமதத்தை ஏற்படுத்துவதாகும். தாவா சொத்தை பொறுத்து உரிமை விளம்புகை பரிகாரம் கோரி நீதிமன்ற கட்டணத்தை செலுத்திவிட்டு தற்போது தாவா சொத்தின் மேற்குபக்க சொத்திற்கும் மேற்படி மனுதார்கள் விளம்புகை கோரும் வகையில் மேலே சொல்லப்பட்ட விபரங்களை சேர்த்து கோரியுள்ளனர். அதனால் மேற்கு பக்க சொத்தை விளம்புகை கோரினால் அதற்கான சொத்தின் அளவு எவ்வளவு என்றும் அதற்கான மவுண்ட் விபரம் குறித்தும் மாற்றம் செய்யப்படவேண்டிய விபரத்தையும் மனுவில் சொல்லவில்லை.

பிராதில் திருத்தம் செய்யவேண்டிய விபரங்களை எல்லாம் மனுதாரரால் மனுவில் பாரா 2ல் ஒத்தி ஏற்படுத்திய திருத்தப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டத்தில் மேற்படி ஆவணம் திருத்தப்பட்ட தேதியோ சொல்லப்படவில்லை. அதேபோல் பாரா 2ல் பாக பாத்திய பத்திரம் எழுதிகொடுத்ததாக சொல்வதில், மேற்படி ஆவணம் மூலமாக எவ்வித உண்மைதன்மையும் மனுவில் சொல்லப்படவில்லை. அதேபோல் தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்து எவ்வளவு அளவு என்று சொல்லவில்லை. மேற்கு பக்கம் உள்ள சொத்தை பொறுத்து மனுதாரர்கள் விளம்புகை பரிகாரம் கோர கடமைப்பட்டவர்கள் என்று மனுவில் சொல்லப்படவில்லை. மேற்கு பக்கம் உள்ள சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரினால் அதற்கான அதிகார வரம்பு இந்நீதிமன்றத்திற்குள் வராது. அதேபோல் கடந்த 17.02.1999 தேதிய அடமான பத்திரத்தை பொறுத்து சொல்லப்பட்ட விபரத்தை பொறுத்து மேற்படி பத்திரமானது பதிவு செய்யப்பட்ட பத்திரமான என்ற விபரத்தை மனுவில் தெளிவாக சொல்லப்படவில்லை. அதேபோல் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்து அதில் 1/8 பங்கு உரிமை உள்ளது என உத்தரவாகியுள்ளது என சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்த மனுவில் வழக்கு எண் என்ன என்றோ உத்தரவு தேதியோ சொல்லப்படவில்லை. மேலும் இறுதிநிலை தீர்ப்பாணை குறித்து எவ்வித மனுவும் இந்த மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் மனுவில் எந்தவொரு விபரத்தையும் முழுமையாக எடுத்துரைக்காமல் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்ட விபரங்களின் அடிப்படையில் இந்த திருத்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அதனால் எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யும் படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.**<u>பிரச்சனை:</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா, இல்லையா என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

5. **தீர்வுகள்:**

i) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.15 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கினை தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. இந்நிலையில் இந்த சீர்திருத்த மனுவை மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) பிராதினை சீர்திருத்தம் செய்வதற்கு மனுதாரர்கள்/வாதிகளால் மனு அபிடவிட்டில் சொல்லப்பட்ட காரணமானது, அசல் வழக்கில் பிராது பரிகாரத்துடன் கூடுதலாக 1, 2 , 7, மற்றும் 9ம் எதிர்மனுதாரர்களுக்காக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவும், மேலும் வழக்கில் ஆவணங்களின் அடிப்படையிலும் ஏற்கனவே உள்ள சில பொருண்மைகளை பொறுத்தும் நீதிமன்றம் கவனித்தில் கொண்டு வந்து அசல் வழக்கில் திருத்தம் செய்யவேண்டியது அவசியமானது என சொல்லப்பட்டுள்ளது. மேலும் சீர்திருத்த வழக்கை தாவா சொத்தையும், அதனோடு இணைந்த மேற்குபக்க சொத்தையும், சேதுகோனார் கிரையம் வாங்குவதற்கு முன்பு லெட்சுமி அம்மாளின் தாயார் வேலாயி அம்மாளை பெற்ற தாயாரான சின்னக்குட்டி அம்மாள் மேற்படி சொத்துக்களை கடந்த 22.08.1922ம் ஆண்டு ஆவண எண்.377/22 மூலம்கிரையம் பெற்று அனுபவித்து வந்ததாகவும், அவருக்கு பின் அவரது மகள் வேலாயி வாரிசு உரிமை அடைந்து 15.05.1954 தேதியில் கிருஷ்ணகோனாருக்கு ஒத்திவைத்து, பின்பு சேதுகோனாருக்கு ஆவண எண்.296/1968 மூலம் கிரையம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது.

மேற்படி 22.08.1922 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை ஆவணத்தில் தாவா சொத்துக்களை மேற்படி சேதுகோனாருக்கு கிரையம் கொடுப்பதற்க முன்பாகே சின்னக்குட்டி அம்மாள் கிரையம் வாங்கிதயாக ஆவணத்தின் அடிப்படையில் அனுமானிக்கமுடிகிறது. அதேவேளையில் ஷை ஆவணத்தை

பொறுத்து எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர் வழக்குரையில் சொல்லப்பட்டதை பொறுத்து திருத்தம் கோரப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது. எனவே தாவா சொத்தையும் அதனோடு இணைந்த மேற்குபக்க சொத்தும் மேற்படி சின்னக்குட்டிஅம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்பது உண்மை என தெரியவருகிறது. அதனால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கினை திருத்தம் கோருவது அனுமதிக்கத்தக்கதாகும்.

மேலும் அந்த ம.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் சின்னக்குட்டி அம்மாளின் வாரிசான வேலாளி அம்மாள் சொத்தின் சுவாதினத்தை அடைந்து 15.05.1954 ம் படி கிருஷ்ணகோனாருக்கு ஒத்தி ஏற்படுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது. அந்த ஒத்தி ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை ஆவணத்தில் ம.சா.ஆ.1 ல் கண்ட சொத்துக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என நான்குமால்களின் மூலம் அனுமானிக்கமுடிகிறது. அதேபோல் அந்த ஒத்தி ஆவணத்தின் அடிப்படையில் தான் ஆவண எண்.296/1968 மூலம் சேதுகோனாருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. எனவே ஷை ஆவணங்களை மறைத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சேதுகோனார் கிரையம் வாங்கிய சொத்து மற்றும் அதனோடு இணைந்த மேற்குபக்க சொத்தையும் கிரையம் பெறவில்லை என ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரர்கள்/வாதிகள் சீர்திருத்த விபரத்தில் பிராது பத்தி III, 5 வது பாராவில் கோரப்பட்ட விபரங்கள் அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

iii) அடுத்ததாக மனுதாரர்கள்/வாதிகள் பிராது பத்தி III, 6 வது பாராவில் சொல்லப்பட்ட சீர்திருத்த விபரங்கள் மேற்படி தாவா சொத்து அதனோடு இணைந்த மேற்குபக்க சொத்தின் அளவினை பொறுத்து ஒத்திதாரரான கிருஷ்ணகோனாரின் மனைவி பஞ்சவர்ணம்மாள் அளவீடு சம்பநதமாக பிரச்சனை செய்ததால், 14.11.1968 ம் தேதி ஆவண எண்.487/1968 மூலம் பாக விடுதலை பத்திரம் சேதுகோனாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என சொல்லப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்கும்விதமாக ஷை ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து மற்றும் சர்வே எண்ணில் காட்டப்பட்டுள்ளது.

அதனை மறுத்து எதிர்மனுதரார்கள்/பிரதிவாதிகள் எந்தவித ஆவணங்களோ சாட்சிகளோ தாக்கல்செய்யவில்லை. மேற்படி ஆவணம் குறித்து பிராதினை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதரார்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் எதிருரையில் குறிபிட்டு சொல்லப்படவில்லை. அதனால் மனுதாரர்கள்/வாதிகள் சீர்திருத்த விபரத்தில் பிராது பத்தி III, 6 வது பாராவில் கோரப்பட்ட விபரங்கள் அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

அடுத்ததாக மனுதாரர்கள்/வாதிகள் பிராது பத்தி III, 7 வது பாராவில் மேற்படி சொத்தினை அடைந்த சேதுகோனார் அனுபவம் செய்து 07.01.1971 தேதியில் அங்குச்சாமி சேர்வைக்கு ஒத்தி ஏற்படுத்தி, பின்பு ஒத்தியை மீட்டு 23.02.1978 தேதியில் கிருஷ்ணகோனார் என்பவருக்கு 5 வருட காலத்திற்கு ஒத்தி ஏற்படுத்தி, பின்பு அந்த ஒத்தியை மீட்டு 22.08.1985 தேதியில் சுரேஷ் நம்புகுமார் என்பவருக்கு அடமானம் வைத்ததாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி 07.01.1971 தேதியிட்ட ஒத்தி ஆவணத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.11 மற்றும் ம.சா.ஆ.14 ஆகவும், 23.02.1978 தேதியிட்ட ஒத்தி ஆவணத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4. ஆகவும், அதேபோல் 22.08.1985 தேதியிட்ட அடமானம் ஆவணம் ம.சா.ஆ.13 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை மறுத்து எதிர்மனுதரார்கள்/பிரதிவாதிகள் எந்தவித ஆவணங்களோ சாட்சிகளோ தாக்கல்செய்யவில்லை. மேற்படி ஆவணம் குறித்து பிராதினை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதரார்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் எதிருரையில் குறிபிட்டு சொல்லப்படவில்லை. அதனால் மனுதாரர்கள்/வாதிகள் சீர்திருத்த விபரத்தில் பிராது பத்தி III, 7 வது பாராவில் கோரப்பட்ட விபரங்கள் அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

அடுத்ததாக மனுதாரர்கள்/வாதிகள் பிராது பத்தி III, 8 வது பாராவில் மேற்படி சேதுகோனார் 04.03.1993 ல் இறந்துவிட்டதால் அவரது வாரிசான 2 ம் வாதி மேற்படி சுரேஷ் நம்புகுமாருக்கு ஏற்படுத்திய அடமான பத்திரத்தை 19.09.1994 ல் தேதியில் made over பெற்று, 1 ம் பிரதிவாதியான ராஜவேலுக்கு, சேதுகோனாரின் வாரிசுகள் 17.02.1999 தேதியில் அடமானம் வைத்ததாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி 19.09.1994 தேதியிட்ட அடமான made over செய்த பத்திரத்தின் நகல் ம.சா.ஆ.12. அதன்பின்பு மேற்படி 17.02.1999 தேதியிட்ட அடமான பத்திரமானது ம.சா.ஆ.5. மற்றும் ம.சா.ஆ.10 ஆகவும்

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை மறுத்து எதிர்மனுதரார்கள்/பிரதிவாதிகள் எந்தவித ஆவணங்களோ சாட்சிகளோ தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணம் குறித்து பிராதினை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதரார்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் எதிருரையில் குறிபிட்டு சொல்லப்படவில்லை. அதனால் மனுதாரர்கள்/வாதிகள் சீர்திருத்த விபரத்தில் பிராது பத்தி III, 8 வது பாராவில் கோரப்பட்ட விபரங்கள் அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

அடுத்ததாக மனுதாரர்கள்/வாதிகள் பிராது பத்தி III, 9 வது பாராவில் சேதுகோனார் இறப்பிற்கு பின்பு அவரது வாரிசுகளான கருப்பாயி அம்மாள, 2ம் வாதி குமார், கருப்பையா, முனியசாமி மற்றும் நம்பு என்ற தில்லை ஆகியோர் மட்டும் ராஜவேலுக்கு 11.07.2001ம் தேதியில் கிரையம் ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளார். அதனால் 4, 5, 6 பிரதிவாதிகள் மேற்படி நபர்கள் கொடுத்த கிரையம் கட்டுப்படுத்தாது என்று இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கில் 1 மற்றும் 7 வாதிகளுக்கு தாவா சொத்தில் 1/8 பங்கு உள்ளதாக உத்தரவு ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பாக பிரிவினை வழக்கு அ.வ.எண்.135/2004 ல் ஏற்பட்ட தீர்ப்பாணையானது ம.சா.ஆ.15 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை மறுத்து எதிர்மனுதரார்கள்/பிரதிவாதிகள் எந்தவித ஆவணங்களோ சாட்சிகளோ தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணம் குறித்து பிராதினை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதரார்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் எதிருரையில் குறிபிட்டு சொல்லப்படவில்லை. அதனால் மனுதாரர்கள்/வாதிகள் சீர்திருத்த விபரத்தில் பிராது பத்தி III, 9 வது பாராவில் கோரப்பட்ட விபரங்கள் அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

அடுத்ததாக இவ்வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் பிராது பத்தி III, 10 வது பாராவில் சொல்லப்பட்ட சங்கதிகளில் இருந்து சேதுகோனாரின் வாரிசுகளான வாதிகளுக்கும் 4, 5, 6 பிரதிவாதிகளுக்கும் சொத்தில் பங்கு பாத்தியம் என்பதற்கு அவர்களுக்கிடையே தாவா சொத்தை பொறுத்து பட்டா எழுவதற்கு முயற்சி எடுத்து வருவதாகவும் மேலும் தாவா சொத்தில் மண்டபம் பேரூராட்சியால் ஹாலோ பிளாக் கற்களை கொண்டு நடைபாதை அமைத்தால், 2ம் வாதி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.34/2015 வழக்கு

தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், அதேபோல் பிராது III, 12 பாராவிற்கு அடுத்து 13 வது பாராவாக, 1ம் பிரதிவாதியின் தூண்டுதலினால் தாவா சொத்தில் 2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள். இரும்பு தகர செட்டை அமைத்ததாலும். அதனை தடுத்த மனுதாரர்கள்/வாதிகளை கொலைமிரட்டல் விடுத்ததாகவும் சொல்லப்பட்ட சங்கதிகளும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது நடந்திருந்தாலும், அந்த சங்கதிகள வழக்கு சம்பவத்தின்போது தொடர்புடையதாக இருப்பதாலும், தாவா சொத்து சம்பந்தமாக பரிகாரம் கோரும் மனுதாரர்கள்/வாதிகளால் நீதிமன்றத்திற்கு தெளிவுப்படுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது.

மேலும் பிராது III, 13 பாராவிற்கு அடுத்து 14 வது பாராவாக வழக்கு மூலம் பாராவை திருத்தம் செய்வதற்கு சொல்லப்பட்ட சங்கதிகள் அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்து சம்பந்தமாக நிகழ்ந்த சங்கதிகள் ஆகும். அதனால் வழக்கு மூலம் பாராவில் திருத்தம் செய்வதால் அசல் வழக்கின் அடிப்படை தன்மை எதுவும் மாறப்போவதில்லை.

அதேவேளையில் வழக்கிற்கு பிற்பாடு தாவா சொத்தில் 2, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆக்கிரமித்து இரும்பு தகர செட்டினை கட்டியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக வழக்குரை பரிகாரத்தில் சீர்திருத்தம் கோரப்பட்டுள்ளது. தாவா சொத்தில் மேற்படி 2, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆக்கிரமித்து இரும்பு தகர செட்டினை கட்டியுள்ளார்கள் என்பததை நிரூபிக்கும் சுமை மனுதாரர்கள்/வாதிகளுக்கு தான் உள்ளது. அது சம்பந்தமாக பிராது பரிகாரத்தை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவித கஷ்ட நஷ்டமும் ஏற்படபோவதில்லை.

அதேவேளையில் 2, 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி பிராது பரிகாரத்தில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி சீர்திருத்தம் கோருவது ஏற்புடையதல்ல என்றும், அதற்கு ஆதரவாக 2016 ( 5) CTC 495 என்ற முன்தீர்ப்பினை சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது.

மேற்படி முன்தீர்ப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் அந்த வழக்கில் தாவா சொத்தின் உரிமைமூலத்தை(title) பிரதிவாதிகள் மறுத்துள்ளார்கள். அதனால் வாதிகள் விளம்புகை மற்றும் சுவாதீனம் பரிகாரம் கோரி

அசல் வழக்கினை தாக்கல் செய்துவிட்டு, பின்பு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிராதை சீர்திருத்தம் செய்யமுடியாது என சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் இந்த வழக்கின் பொருண்மைகளின்படி தாவா சொத்தானது ஆதியில் சேதுகோனாருக்கு பாத்தியம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. வாதிகளால் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்திற்கு கிழக்கு பக்கம் கோவிந்தகோன் வீடு உள்ளது. அதனால் 1ம்பிரதிவாதியின் இடத்திற்கு கிழக்கே வாதிகளுக்கு எந்த சொத்தும் இல்லை என 2 மற்றும் 3 பிரதிவாதிகளால் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. அதனால் வாதிகள், 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தானது சேதுகோனாருக்கு பாத்தியப்பட்டது என்பது எந்த கட்சியும் இல்லை. அதனால் இந்தவழக்கில் தாவா சொத்தினை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகள் உரிமை விளம்புகை பரிகாரத்துடன் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிராதை சீர்திருத்தம் செய்வது அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

அதேவேளையில் 2, 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரையில் தாவா சொத்திற்கு மேற்குபக்கம் உள்ள சொத்து எவ்வளவு அளவு என்று சொல்லவில்லை. மேற்குபக்கம் உள்ள சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரினால் அதற்கான அதிகார வரம்பு இந்நீதிமன்றத்திற்குள் வராது. அதேபோல் 17.02.1999 தேதியில் அடமானம் பத்திரயம் பதிவு செய்யப்பட்டதா இல்லையா என மனுவில் சொல்லப்படவில்லை என ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆட்சேபனை குறித்து இம்மனுவில் தீர்மானம் செய்யமுடியாது. வழக்கினை விசாரணை செய்ததால் தான் தீர்மானிக்க முடியும். அதனால் மேற்படி ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே மேற்கண்ட பரிசீலனைகளின்படி, இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு நீதியின் நலனை கருத்தில் கொண்டு வாய்ப்பு அளித்து இந்த மனுவை கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம் என நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

மனுதாரர்கள்/வாதிகள் வரும் 01.09.2023ம் தேதிக்குள் ரூ.500/-யை செலவுத்தொகையாக 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கும் மற்றும் 2, 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகையாக ரூ.1500/-யை செலுத்தும்பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும். தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் உத்தரவிடப்படுகிறது.

மீண்டும் அழைக்க 01.09.2023.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆகஸ்ட் திங்கள் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-S.இளையராஜா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :- இல்லை**

**<u>மனுதாரர் தரப்பு சாண்றாவணம்</u> :-**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 22.08.1922 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 15.05.1954ம் தேதியிட்ட ஒத்தி ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 14.11.1968ம் தேதி ஆவண எண்.487/1968 மூலம் பாக விடுதலை பத்திரதின் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 23.02.1978 தேதியிட்ட ஒத்தி ஆவணத்தின் சான்றிட்ட நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.5 | 17.02.1999 தேதியிட்ட அடமான பத்திரத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | மண்டபம் பேரூராட்சி சொத்து வரி ரசீதுகள் சான்றிட்ட நகல்கள் எண்ணம்–7 |
| ம.சா.ஆ.7 | மண்டபம் பேரூராட்சி சொத்து வரி ரசீதுகளின் நகல்கள் எண்ணம்–6 |
| ம.சா.ஆ.8 | 15.02.2001 ம் தேதியிட்ட சொத்துவரி ரசீதின் நகல் |
| ம.சா.ஆ.9 | 10.10.2018 ம் தேதியிட்ட பட்டாமாறுதல் கோரிய குறிப்பாணையின் நகல் |
| ம.சா.ஆ.10 | 17.02.1999 தேதியிட்ட அடமான பத்திரதின் நகல் |
| ம.சா.ஆ.11 | 07.01.1971 தேதியிட்ட ஒத்தி ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.12 | 19.09.1994 தேதியிட்ட அடமானம் பத்திரத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.13 | 22.08.2015 தேதியிட்ட அடமானம் பத்திரத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.14 | 07.01.1971 தேதியிட்ட அடமான made over செய்த பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.15 | அ.வ.எண்.135/2004 ல் ஏற்பட்ட தீர்ப்பாணை |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி,சான்றாவணம்** :– இல்லை

Sd/–S.இளையராஜா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராமேஸ்வரம்.
ஐ.ஏ.எண். 49/2020
இன்
அ.வ.எண்.42/2015
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:16.08.2023